
# වාර්ෂික වාර්තාව සහ ගිණුම් ප්‍රකාශය
# வருடாந்த அறிக்கையும் நிதிக்கூற்றும்
# ANNUAL REPORT & STATEMENT OF ACCOUNTS



# 2014

පුනරුත්ථාපන අධිකාරිය
புனர்வாழ்வு அதிகார சபை
**REHABILITATION AUTHORITY**

අංක.59, ඩී.එස්.සේනානායක මාවත, කොළඹ - 08.
இல.59, டீ.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு - 08.
No.59, D.S.Senanayaka Mawatha, Colombo - 08.

## பொருளடக்கம்


*1. கையளிப்புக் கடிதம்*

*2. வருடாந்த அறிக்கை*

*3. வருடாந்த கணக்குகளின் அறிக்கை*

*4. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை*

*5. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மீதான தலைவரின் அவதானிப்பு*

# <u>கையளிப்புக் கடிதம்</u>

**கௌரவ. டீ.எம்.சுவாமிநாதன்,**

பாராளுமன்ற உறுப்பினர்,

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர்,

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு,

இல. 146, ஏ, காலி வீதி, கொழும்பு – 03.

**கௌரவ அமைச்சர் அவர்களுக்கு,**

1971 ஆம் ஆண்டின் 38 ம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 29ம் இலக்க ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையின் 2014 ம் ஆண்டு டிசம்பர் 31 ம் திகதி முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதியறிக்கையையும், அதிகாரசபையின் ஆண்டறிக்கையையும் கணக்குகளின் கூற்றையும் பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் உண்மையுள்ள,

**என்.பத்மநாதன்,**

தலைவர்,

புனர்வாழ்வு அதிகாரசபை.


**ஆட்களையும் ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை. (றெப்பியா),**

இல. 59, டீ. எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு - 08.

## தூர நோக்கு

புனர்வாழ்வளித்தல் ஊடாக சமூக பொருளாதார மற்றும் சமூக இணக்கப்பாட்டை ஏற்படுத்தல்

## குறிக்கோள்

வன்செயல்கள், குழப்பங்கள், இனக்கலவரங்கள், யுத்தம் மற்றும் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களினது மறுவாழ்வை புனர்வாழ்வினூடாக ஏற்படுத்தி பொருளாதார விருத்தி கண்ட தேசமாக, சமூகமாக ஆவதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

7) அங்ஙனம் அரசுடமையாக்கப்பட்ட சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்களுக்கு அச்சொத்துக்களை மீளக் கையளித்தல்.

8) அரசின் பொறுப்பில் பாரஞ்சாட்டப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் அவற்றின் குடியிருப்பாளர்கள் இடையில் உண்டாகும் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.

## (ஆ) ஏனைய பணிகள்

அ. ஒருங்கிணைந்த நிவாரண உதவித்திட்டத்தின (UAS) கீழ் மீள் குடியேற்றக் கொடுப்பனவை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

ஆ. பயங்கரவாத வன்செயல் காரணமாக இறந்த/காயமுற்ற/சொத்துக்களுக்காக ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக நட்டஈடு வழங்குதல்

இ. பயங்கரவாத வன்செயல் காரணமாக சொத்துக்கள் அழிவுற்றல் அல்லது அவற்றுடன்செயற்பட்டுள்ளதிற்காக நட்டஈடு வழங்கல்

ஈ. பாதிப்புற்ற அன்றேல் அழிவுற்ற வணக்கஸ்தலங்களைப் புனர்நிர்மாணம் செய்ய உதவியளித்தல்.

உ. தேர்தல் வன்முறையால் பாதிப்புற்றவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.

ஊ. வீடு, வியாபாரம் மற்றும் கைத்தொழில் புனரமைப்பதற்காக கடன் வழங்கல்

எ. பாதிப்புற்ற நபர்கள் / விதவைகளுக்காக சுயதொழில் கடன் திட்டத்தினை அமுல்படுத்தல்

ஏ. யுத்தத்தினால் பாதிப்படைந்த பாடசாலை பிள்ளைகளுக்காக நிவாரணம் வழங்கல்

ஐ. சுயதொழில் நிவாரணக் கடன் திட்டம்.

ஒ. வீட்டுக் கடன் திட்டம்.

ஓ. சமூகமயப்படுத்தப்பட்ட பயிலுனர்களுக்கான சுயதொழில் நிவாரணக் கடன் திட்டம்

ஔ. கிராமிய புனர்வாழ்வுத் திட்டத்தை அமுல்படுத்துதல்.

## (இ) செயற்பாடுகளின் விபரங்கள்.

### 01. ஒருங்கிணைந்த நிவாரண உதவித்திட்டம் (வீட்டு மானியம் வழங்குதல்)

புனர்வாழ்வு அதிகாரசபையினால் மீள் குடியேற்ற புனர்வாழ்வு உதவி, பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு "ஒருங்கிணைந்த நிவாரண உதவித்திட்டம்" எனும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இதனை புனர்வாழ்வு அதிகாரசபையும், இந்த

சபைக்குப் பொறுப்பான அமைச்சும இணைந்து செயற்படுத்துகின்றன. இத்திட்டம் 1983ம் ஆண்டு அவசர புனர்வாழ்வு, புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, பின்னர் 1994 மற்றும் 2002ம் ஆண்டுகளிலும் இருமுறை பாதிக்கப்பட்டோருக்கு கூடுதல் நலன்புரி நோக்கில் திருத்தியமைக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பாதிககப்பட்டவர்களுக்கு 06.03.2003ல் இருந்து ஆகக் கூடிய தொகையாக 100,000.00 வழங்கப்படுகின்றது.

புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் 2010 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திட்டத்தை சிறப்பாக அமுல்படுத்துவதற்கு மேற்படி கொடுப்பனவானது ரூபா 50,000.00 ஆக இரண்டு தவணைகளில் இடம்பெயர்ந்தவர்களின் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள் திருத்தியமைப்பதற்காக வழங்கப்படுகின்றது.

நடப்பாண்டில் மேற்படி திட்டத்தின் கீழ் 241 குடும்பங்களுக்காக ரூபா 11,995,500.00 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இக்குடும்பங்கள் பிரதானமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## 2. புனர்வாழ்வு உதவிகள் (நட்டஈடு/நிதியுதவி)

### 2.1 <u>மரணம், காயம் என்பவற்றுக்கான நட்டஈடு வழங்கல்</u>

**(அ) அரச/ கூட்டுத்தாபன ஊழியருக்கான நட்டஈடு**

➢ ***<u>மரணத்திற்கான நட்டஈடு</u>***

அரச/கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு பயங்கரவாத நடவடிக்கைகளினால் மரணம் ஏற்படின், அத்தகைய ஊழியர்களில் தங்கியுள்ளோர்/நெருங்கிய உறவினர்களுக்கு ரூபா.200,000.00 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இது அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல.21/88, 59/89 மற்றும் அதற்குமேலாக மாற்றியமைக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

நடப்பாண்டில் மேற்படி திட்டத்தின் கீழ் 07 நபர்களுக்காக ரூபா 1,000,000.00 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

➢ ***<u>காயங்களுக்கான நட்டஈடு</u>***

பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமடையும் அரச / கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு அவர்களுக்கு ஏற்ப்டும் காயத்தினால் ஏற்படும் தொழில் இழப்பின் வீதத்தை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் மருத்துவ சான்றிதழின் அடிப்படையில், ஆகக் கூடுதல் தொகையாக ரூபா.100,000.00 நட்டஈடாகப் வழங்கப்படுகின்றது.

அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல.21/88, 59/89 மற்றும் அதற்குமேலாக மாற்றியமைக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 06 நபர்களுக்கு ரூபா.200,000.00 வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) <u>அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நட்டஈடு</u>

(i) *<u>மரணத்திற்கான நட்டஈடு</u>*

இந்தத் திட்டத்தின் கீழ் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஆகியோருக்கு பயங்கரவாத செயற்பாடுகளினால் மரணம் சம்பவிக்கும் பட்சத்தில், அவர்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா.500,000.00 வழங்கப்படுகிறது.

(ii) *<u>காயங்களுக்கான நட்டஈடு</u>*

மேலே (i) இல் குறிப்பிட்டுள்ள பிரமுகர்கள் பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமுற்றிருப்பின் மருத்துவ சான்றிதழ் ஒன்றின் அடிப்படையில் ஆகக்கூடிய தொகையாக ரூபா. 500,000.00 நட்டஈடாகப் பெறத் தகுதியுடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எந்தவொரு நபருக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

(இ) <u>கடும் பாதிப்புற்றோருக்கான நட்டஈடு</u>

(i) *<u>மரணத்திற்கான/காயங்களுக்கான நட்டஈடு</u>*

பயங்கரவாத வன்செயல், இனக்கலவரம், மக்களிடையே ஏற்படும் மோதல்கள் மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளினால் மரணமடையும் பொதுமக்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு அல்லது அதனால் காயமடையும் ஒருவருக்கு இந்நட்டஈட்டுக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் நட்டஈடு வழங்கப்படுகின்றது.

இறப்பிற்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா 100,000.00

- காயமுற்றவர்களுக்காக ஆகக்கூடிய தொகையாக ரூபா 50,000.00 வழங்கப்படுகின்றது.
  (மருத்துவ சான்றிதழின் அடிப்படையில் காயத்தினால் ஏற்படும் தொழில் இழப்பின் வீதத்தின் பிரகாரம் நட்டஈடானது தீர்மானிக்கப்படுகின்றது.)

➢ இந்தத் திட்டத்தின் கீழ் 1387 நபர்களுக்கு ரூபா.138,477,500.00 நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

2.2 <u>பாதிக்கப்பட்ட / அழிவுற்ற சொத்துக்களுக்கான நட்டஈடு</u>

(அ) அரச/ கூட்டுத்தாபன ஊழியருக்கான நட்டஈடு

1987 ம் ஆண்டு ஜூலை /ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற இன வன்முறைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற, நடைபெறும் இத்தகைய வன்முறைகள் என்பவற்றால் தம் சொத்துக்கள் பாதிப்புற்ற அரச / கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகையாக ரூபா.150,000.00ஐ பெற உரித்துடையோராவார். இது பொது நிர்வாக அமைச்சின் 49/89ம் இலக்க சுற்றுநிருபத்தின் கீழ் வழங்கப்படுகின்றது.

- இந்தத் திட்டத்தின் கீழ் 503 நபர்களுக்கு ரூபா.65,542,203.00 நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

(ஆ) அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நட்டஈடு

மேலே (அ) இல் குறிப்பிட்டுள்ளவாறான வன்முறைகளில் தம் சொத்துக்கள் பாதிப்புற்ற/அழிவுற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், மேலும் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஆகியோர் ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகையாக முறையே ரூபா. 500,000.00 மற்றும் 150,000.00 உச்ச தொகைக்கு அமைவாக பெறத் தகுதியுடையோராவார்.

- இந்தத் திட்டத்தின் நடப்பாண்டில் நட்டஈடுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

(இ) பொது மக்களுக்கான நட்டஈடு

மேலே (அ) மற்றும் (ஆ) இரண்டிலும் குறிப்பிடாத பொது மக்களது சொத்துக்கள், வாகனங்கள் பாதிப்புற்றிருப்பின் / அழிவுற்றிருப்பின், அவற்றுக்கான நட்டஈடாக ரூபா. 100,000.00, அன்றேல் அழிவில் 20% கொடுப்பனவை, பெற்றுக் கொள்ளத் தகுதியுடையோராவார்.

1983ம் ஆண்டு ஜூலைக் கலவரம் மற்றும் அதன்பின்னர் ஏற்பட்ட இழப்புக்களுக்கான நட்டஈடாக இது வழங்கப்பட முடியும். இந்நட்டஈட்டுத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருப்பது 1996.02.16 திகதியிலிருந்தாகும்.

- இவ்வருடத்தில் 987 நபர்களுக்கு ரூபா.76,619,559.00 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

### 2.3 வணக்கஸ்தலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு/ அழிவுகளுக்கான நட்டஈடு

பயங்கரவாத நடவடிக்கையினால் பாதிப்புற்ற அன்றேல் அழிந்த வணக்கஸ்தலங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவி இச்சபையினால் வழங்கப்படுகிறது. முற்றாக அழிந்து போன வணக்கஸ்தலங்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா.1,000,000.00 உம் மற்றும் பகுதி சேதமுற்ற வணக்கஸ்தலங்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா.500,000.00 உம் வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்தின் கீழ் நடப்பு வருடத்தில் 213 வணக்கஸ்தலத்துக்கு ரூபா.20,007,312.00 வழங்கப்பட்டது.

## 03 திருமண சுபீட்சக் கொடுப்பனவு

பயங்கரவாத வன்செயல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வன்செயல்களின் காரணமாக அரச நலன்புரி நிலையங்களில் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் வாழ்ந்து அல்லது வாழ்ந்திருந்த போது திருமணமான ஒரு நபருக்கு ரூபா. 12,500.00 நிவாரணமாக பெற உரித்துடையவராவர்.

குறைந்த மட்டத்தில் வருமானம் பெறும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இத்திட்டத்தின் கீழ் நிவாரணமானது வழங்கப்படுகின்றது. திருமணமான இருவரும் அரசினால் நடாத்தப்படும் நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களாயின் ரூபா. 25,000.00 கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இந்நிவாரணத்திட்டம் 1995 ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 04.புனர்வாழ்வுக் கடன் திட்டங்கள்

### (i) சுயதொழில் பயனாளிகளுக்கான பயிற்சித் திட்டம்

2012ம் வருடத்திலிருந்து இவ்வாண்டு இறுதி வரையிலும் யுத்தம் காரணமாக பாதிப்படைந்த (இறந்த/காயமுற்ற/விதவைகள் அல்லது பொருளாதார ரீதியாக) பொது மக்களுக்காக மற்றும் புனர்வழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்காக அமுல்படுத்தப்படும் சுயதொழில் கடன் திட்டத்தின் கீழ் தேர்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்காக தொழில் அபிவிருத்தி பயிற்சித் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. அதன் கீழ் தேர்தெடுக்கப்பட்ட பயனாளிகள் 2039 பேருக்கு பயிற்சி வழங்குவதற்காக செயலமர்வுகள் 16 நடப்பாண்டில் நடாத்தப்பட்டுள்ளது. அதற்காக ரூபா 1,056,755.00 செலவழிக்கப்பட்டது

## (i) கைத்தொழில் கடன்

பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிப்படைந்த பதிவு செய்துள்ள கைத்தொழிலொன்றை புனர்நிர்மாணம் செய்வதற்காக 9% வட்டியுடன் மீளச் செலுத்தும் காலம் 10 வருடங்களின் கீழ் ஒரு கைத்தொழில் நிறுவனத்திற்கு ரூபா ஐந்து 5 மில்லியன் வழங்கப்படுகின்றது. கடன் வழங்குதல் மற்றும் மீளப்பெறல் இலங்கை வங்கியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ஒரு கைத்தொழிலுக்காக ரூபா 2,500,000.00 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

*(11)* <u>சுயதொழில் கடன் திட்டம்</u>

பயங்கரவாத வன்செயல், யுத்த சூழ்நிலை மற்றும் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் யுத்தத்தின் காரணமாக கணவனை இழந்த விதவைகளுக்கும் நிவாரணம் வழங்கும் பொருட்டு இப்புதிய கடன் திட்டத்திற்கு 2010ம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு 4% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் மற்றும் ஒரு வருட நிவாரணக் காலத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும். ஆகக் கூடிய தொகையாக ரூபா. 250,000.00 வழங்கப்படுகின்றது. குறிப்பாக இக்கடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. கீழ் குறிப்பிட்டுள்ள தகவல்களின் மூலம் காட்டப்படுவது மாவட்டங்கள் அடிப்படையில் வழங்கப்பட்ட கடன்களின் தொகையாகும்.

- நடப்பாண்டில் கீழ் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

| இல | மாவட்டம் | வழங்கப்பட்டோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 62 | 7,875,000.00 |
| 2 | கிளிநொச்சி | 10 | 1,375,000.00 |
| 3 | முல்லைத்தீவு | 44 | 6,310,000.00 |
| 4 | மன்னார் | 46 | 7,400,000.00 |
| 5 | வவுனியா | 48 | 6,480,000.00 |
| 6 | மட்டக்களப்பு | 80 | 10,555,000.00 |
| 7 | அம்பாறை | 112 | 13,709,000.00 |
| 8 | திருகோணமலை | 31 | 4,145,000.00 |
| 9 | ஏனைய மாவட்டம் | 01 | 200,000.00 |
| | மொத்தம் | 434 | 58,049,000.00 |

அந்த அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் மொத்தமாக 434 பயனாளிகளுக்கு ரூபா. 58,049,000.00 வழங்கப்பட்டுள்ளது.

*(111)* <u>வீட்டுத்திட்டக் கடன்</u>

2010ம் ஆண்டில் இக்கடன் திட்டத்திற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனானது பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 4% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் ஒரு வருட நிவாரணக் காலத்துடன் ஆகக் கூடிய தொகையாக ரூபா. 250,000.00 வழங்கப்படுகின்றது.

- 2014ம் ஆண்டில் வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் 73 பயனாளிகளுக்கு ரூபா. 17,000,000.00 வழங்கப்பட்டுள்ளது.

**புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான அமுல்படுத்தப்படும் சுயதொழில் <u>நிவாரணக் கடன் திட்டம்</u>**

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான அமுல்படுத்தும் சுயதொழில் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2012.01.31ம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டத்திற்காக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினால் 2012.04.25ம் திகதியில் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டத்தின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு

I. ஆகக்கூடிய கடன் தொகை ரூபா 250,000.00 ஆகும்.
II. வருடாந்த வட்டி வீதம் 4% ஆகும்.
III. ஒரு வருட நிவாரணக் காலம்
IV. கடனை மீளப் பெறும் காலம் 10 வருடங்களாகும்.

கடன் வழங்குதல் மற்றும மீளப் பெறல் கீழ் குறிப்பிட்டுள்ள நிதி நிறுவனங்களாகும்.

I. இலங்கை வங்கி
II. மக்கள் வுங்கி
III. இலங்கை சேமிப்பு வங்கி

- 2014ம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை சுயதொழில் ரீதியில் கீழ் வருமாறு:

| இல | சுயதொழில் வர்க்கம் | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | விவசாயம் | 01 | 100,000.00 |
| 2 | கால்நடை | 07 | 1,150,000.00 |
| 3 | மீன்பிடி | 08 | 1,615,000.00 |
| 4 | சிறு வியாபாரம் | 06 | 925,000.00 |
| 5 | வீட்டுடன் தொடர்புடைய கைத்தொழில் | 01 | 100,000.00 |
| 6 | உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்தல் | 01 | 100,000.00 |
| 7 | வாகனம் கொள்வனவு செய்தல் | 01 | 200,000.00 |
| | மொத்தம் | 25 | 4,190,000.00 |

*(iv)* <u>கடன் மேற்பார்வைத் திட்டம்</u>

புனர்வாழ்வு அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படும் சகல கடன் திட்டங்களுக்காகவும் விஷேடமாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்காக கடன் மேற்பார்வைத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. அதன்பிரகாரம் நடப்பாண்டில் 1312 வீடுகளுக்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூபா 1,361,427.06 ஆகும்.

5. <u>கிராமிய புனர்வாழ்வுத் திட்டம்</u>

கௌரவ புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர அவர்களின்எண்ணக்கருவின் பிரகாரம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஒன்றிணைவால் யுத்தத்தால் அழிவுற்ற கிராமங்களின் மக்களுக்காக நிவாரணம் வழங்க இதன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

- முல்லைத்தீவு, மல்லாவி, நட்டான்கண்டலில்ரூபா 441,659.80 பெறுமதியான மருந்துகளை பகிர்ந்தளித்தல்
- நட்டான்கண்டல் மாவட்ட வைத்தியசாலையை பிரதானமாகக் கொண்டு அதற்காக ரூபா 29,500.00 நிதி வழங்கல்
- அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 44,782.20 பெறுமதியான மருந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை.
- வாகரை, மட்டக்களப்பு பாலமுனை, கரைதுரைப்பற்று முல்லைத்தீவு மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் மரமுந்திரிகை கன்று பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 300,000.00 வழங்கியமை.

- ➢ கண்டாவளை காஞ்சிபுரம் கிராமத்திற்கு விளையாட்டு உபகரணம் கொள்வனவு செய்வதற்காக ரூபா 22,850.00 வழங்கல் மற்றும் விளையாட்டு உபகரணம் புதுப்பித்தலுக்காக ரூபா 51,750.00 நிதி வழங்கல்
- ➢ வெலிஓய, ஜனகபுர கிராமத்தின் 100 மாணவர்களுக்காக சைக்கிள் 100 வழங்க ரூபா 200,000.00 வழங்கல்
- ➢ கண்டாவளை, காஞ்சிபுர கிராமத்தின் பகுதியளவு பாதிப்படைந்த 60 வீடுகளை புனரமைப்பதற்காக ரூபா 3,100,000.00 வழங்கல்

7. புனர்வாழ்வு அதிகாரசபையின் அலுவலர் சபைக்காக பயிற்சிகள் வழங்குதல்

புனர்வாழ்வு அதிகாரசபையின் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை உத்தியோகத்தர்களுக்காக கணனி, மனித வள முகாமைத்துவம், மொழி, தொழிநுட்பக் கல்வி, பொதுச் சேவைகள் மற்றும் ஏனைய விடயங்களுக்குரிய பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நிறுவனத்தின் சேவை உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறன்களை விருத்தி செய்தல் இப்பயிற்சித் திட்டங்களின் இலக்காகும். 2014ம் ஆண்டிற்குள் சகல பயிற்சிகளுக்காகவும் ரூபா 1,107,680.00 தொகையொன்று செலவழிக்கப்பட்டுள்ளது.

என்.பத்மநாதன்

தலைவர்,

புனர்வாழ்வு அதிகாரசபை.

## 2014.12.31 திகதிக்கான பொது நிறுவனத் துறை நிதி நிலவரம் தொடர்பான விபரம்

| | குறிப்பு | 2014 Rs. Cts. | 2013 Rs. Cts. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கு | 1 | 695,995.00 | 442,442.00 |
| கடன் மீளப் பெற்றவை | 2 | 3,577,721.00 | 73,437,945.00 |
| அலுவலர் சபைக் கடன் | 3 | 13,752,794.00 | 13,702,815.00 |
| ஊழியர்களின் சேமலாப முதலீடு | 4 | 10,766,894.00 | 5,875,222.00 |
| முற்பணம், முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய வருமதிகள் | 5 | 14,145,685.00 | 50,803,077.06 |
| காசு மற்றும் காசுப்பாய்ச்சல் | 6 | 1,502,868.00 | 16,728,294.32 |
| | | 44,441,757.00 | 160,989,795.00 |
| **நடைமுறையிலல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள் - தொழில்கூடம் மற்றும் உபகரணம் | 7 | 21,687,724.00 | 242,757,492.00 |
| நீண்ட கால முதலீடுகள் | 8 | 883,630,000.00 | 868,865,242.00 |
| கணனி தரவுத்தள நிகழ்ச்சி | 9 | 2,688,000.00 | - |
| | | 908,005,724.00 | 1,111,622,734.00 |
| **மொத்த சொத்துக்கள்** | | **952,447,481.00** | **1,272,612,529.00** |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| ஏனைய கொடுப்பனவுகள் | 10 | 906,775 | 2,296,495 |
| | | **906,775** | **2,296,495** |
| **நடைமுறையிலில்லாத பொறுப்புக்கள்** | | | |
| முன்னைய மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 11 | 738,844,380.00 | 738,994,380.00 |
| ஓய்வுக் கால நன்மைகள் | | 10,766,894.00 | 9,348,397.00 |
| | | **749,611,274.00** | **748,342,777.00** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **750,518,049.00** | **750,639,272.00** |
| **தேறிய சொத்து** | | **201,929,432.00** | **521,973,257.00** |
| **தேறிய சொத்துப் பங்கு** | | | |
| அரச மானியம் | | - | 218,996,000.00 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 15,059,772.00 | 6,530,642.00 |
| திரட்டப்பட்ட மிகை | | 177,036,745.00 | 296,446,615.00 |
| **மொத்த பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | | **192,096,517.00** | **521,973,257.00** |

**உறுதிப்படுத்தல்**

2014 டிசம்பர் 31ம் திகதி வரை நிறுவனத்தின் மிகை/பற்றாக்குறை தொடர்பான நிதிக் கூற்று உண்மை எனவும் நியாயமானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................

எஸ்.என்.சீ.டபிள்யூ.எம்.தர்மகீர்த்தி
(உதவிப்பணிப்பாளர் (நிதி)

இந்நிதிக் கூற்றினை தயாரிப்பதில் பூரண உரிமை பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதிக் கூர் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ....................................... | ....................................... | ....................................... |
| **என்.பத்மநாதன்** | **என்.புகேந்திரன்** | **என்.ஆர்.றஞ்சனி** |
| தலைவர் | நிறைவேற்றுப் பணிப்பாளர் | செயலாளர் |

(புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு)

## 2014.12.31 திகதிக்கான பொது நிறுவனத் துறை

## நிதி நிலவரம் தொடர்பான விபரம்

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| | | ரூபா . சதம் | ரூபா . சதம் |
| **வருமானம்** | | | |
| மீள்நடைமுறை மானியம் | 1 | 365,347,000.00 | 237,029,000.00 |
| வட்டி | 2 | 16,657,400.22 | 13,948,205.53 |
| ஏனைய வருமானம் | | 10,200.00 | 17,625.00 |
| பற்றாக்குறைக்காக அழிக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனை | | - | (71,853.21) |
| **மொத்த வருமானம்** | | **382,014,600.22** | **250,922,977.32** |
| **செலவுகள்** | | | |
| ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன் | 3 | 33,149,376.84 | 26,663,773.22 |
| மானியம் மற்றும் ஏனைய மாறுதல் கொடுப்பனவு | 4 | 319,441,211.61 | 193,893,757.99 |
| விநியோகம் மற்றும் நுகர்வோர் | 5 | 1,450,410.29 | 3,539,902.33 |
| மதிப்பிறக்கம் / தேய்மானம் | 6 | 5,069,038.83 | 3,718,248.24 |
| கடன் தீர நிதி சேர்த்தல் | 7 | 11,999,500.00 | - |
| அறவிட முடியாக்கடன் | 8 | 108,056,142.74 | - |
| நிலையான சொத்துக்களை பராமரித்தல் | 9 | 3,254,944.97 | 2,639,710.10 |
| ஏனைய செலவினங்கள் | 10 | 18,413,282.83 | 12,832,277.70 |
| நிதி பெறுமதி | 11 | 442,505.87 | 216,980.58 |
| **மொத்த செலவினம்** | | **501,276,413.98** | **243,504,650.16** |
| **மிகை/உரிய காலத்தின் பற்றாக்குறை** | | **(119,261,813.76)** | **7,418,327.16** |

## ஆட்களையும், ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை

## 2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் அறிக்கை

| விபரம் | குறிப்பு | 2014 ( ரூபா) |
|---|---|---|
| **இயங்கிவரும் நடவடிக்கையின் நிதிப்பாய்ச்சல்** | | |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற கட்டுநிதி | | 365,347,000.00 |
| நானாவித செலவினம் | | 10,200.00 |
| ஏனைய மீண்டுவரும் செலவினம் | A | (375,770,385.23) |
| நிரந்தர வீடமைப்பு நிவாரணம் | | (11,999,500.00) |
| **இயங்கிவரும் நடவடிக்கையின் தேறிய நிதிப்பாய்ச்சல்** | | **(22,412,685.23)** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கையின் நிதிப் பாய்ச்சல்** | | |
| வட்டி | B | 15,377,023.34 |
| கடன் மீளப் பெறல் | C | 9,904,874.57 |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் | D | (7,416,490.71) |
| முதிர்ச்சியடைந்த சொத்துக்களை மீளப் பெறல் | E | 53,235,242.00 |
| முதலீடுகள் | F | (836,133,889.94) |
| **இயங்கிவரும் நடவடிக்கையின் தேறிய நிதிப்பாய்ச்சல்** | | **(12,512,740.74)** |
| **நிதி நடவடிக்கையின் நிதிச் சுற்றோட்டம்** | | **19,700,000.00** |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மானியம் | | 19,700,000.00 |
| **நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | | **(15,225,425.97)** |
| | | |
| **வருட ஆரம்பத்தின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | G | **16,728,294.32** |
| **வருட இறுதியின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | H | **1,502,868.35** |

***கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கிய ஒரு அம்சமாகும்.***
***அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டவை கழித்தலாகக் காட்டப்படல் வேண்டும்.***

## புனர்வாழ்வு அதிகாரசபையின் ஒதுக்கம் மற்றும் பங்கு தொடர்பான கூற்று
## 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தின் தேறிய சொத்து / பங்கு

குறிப்பு - 11

| | திரட்டப்பட்ட நிதி | சேமநல ஒதுக்கீடு | அரசின் மூலதன மானியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2013.01.01 இன் மீதி | 335,991,299.62 | 8,022,924.60 | 198,996,000.00 | 5,738,374.50 | 548,748,598.72 |
| | | | | | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | | | 792,267.80 | 792,267.80 |
| இவ்வருடத்திற்கான ஒதுக்கம் (தேறிய) | | 1,325,472.78 | 20,000,000.00 | | 21,325,472.78 |
| முன்னைய வருட செலவினம் | (51,933,828.13) | | | | (51,933,828.13) |
| முன்னைய வருட வருமானம் | 4,970,816.52 | | | | 4,970,816.52 |
| தேறிய மிகை/வருட பற்றாக்குறை | 7,418,327.16 | | | | 7,418,327.16 |
| 2013.12.31 இன் மீதி | 296,446,615.17 | 9,348,397.38 | 218,996,000.00 | 6,530,642.30 | 531,321,654.85 |

## 2014 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி தொடர்பான அறிக்கை

| 2012 (ரூபா) | குறிப்பு | | 2013 (ரூபா) |
|---|---|---|---|
| 442,442.03 | 1 | சரக்கு | 695,994.67 |
| 442,442.03 | | கையிருப்பு (காகிதாகிகள்) | 695,994.67 |
| 73,437,944.56 | 2 | கடன் மீளப்பெறல் | 3,577,720.82 |
| 4,472,151.03 | | ரூபா 200,000.00 இலங்கை வங்கியின் வர்த்தகக் கடன் | 4,472,151.03 |
| 67,341,609.58 | | ரூபா 200,000.00 இலங்கை வங்கியின் அசையும் சொத்துக்களுக்கான கடன் | 67,341,609.58 |
| 9,289,484.54 | | ரூபா 10,000.00 இலங்கை வங்கியின் சுயதொழில் கடன் | 9,289,484.54 |
| | | | 81,103,245.15 |
| | | கழி- முன் ஏற்பாடு | |
| | | ரூபா 200,000.00 இலங்கை வங்கியின் வர்த்தகக் கடனின் | |
| | | அறவிட முடியாக்கடன் - 20% | 894,430.21 |
| (6,736,352.14) | | ரூபா 25,000.00 இலங்கை வங்கியின் அசையும் சொத்துக்களுக்கான கடன் | 67,341,609.58 |
| (928,948.45) | | ரூபா 10,000.00 இலங்கை வங்கியின் சுயதொழில் கடன் | 9,289,484.54 |
| | | 2014.12.31 ஆண்டின் மீதி | 77,525,524.33 |
| 13,702,815.41 | 3 | அலுவலர் சபைக் கடன் | 13,752,593.61 |
| 8,722,048.26 | | சொத்துக் கடன் | 7,782,228.78 |
| 4,880,524.70 | | அலுவலர் சபைக் கடன் (அனர்த்தம) | 5,890,622.38 |
| - | | அனர்த்தக் கடன் | - |
| 100,242.45 | | பண்டிகைக் கால முற்பணம் | 79,742.45 |
| 5,875,222.01 | 4 | ஊழியர் சேமலாப முதலீடு | 10,766,893.70 |
| 5,875,222.01 | | ஊழியர் சேமலாப முதலீடு | 10,766,893.70 |
| 50,803,077.06 | 5 | முற்பணம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 14,145,684.51 |
| 44,911,247.51 | | கடன் வழங்கும் நிறுவனங்களினால் கிடைக்கப் பெற்ற வட்டி | 46,242,606.12 |
| | | கழி:தே.வீ.அ.அ.சபை வட்டிக்கான ஏற்பாடு | (38,195,919.00) |
| | | | 8,046,687.12 |
| 415,196.84 | | சேமலாப முதலீட்டுக்கான வட்டி | 336,304.22 |
| 208,538.56 | | கிடைக்க வேண்டிய வருமதிகள் | 292,398.31 |

| | | | |
|---|---|---|---|
| 254,801.48 | | முன்னைய கொடுப்பனவுகள் | 290,673.87 |
| 28,292.67 | | பெற வேண்டிய சம்பளம் | 120,565.15 |
| 4,985,000.00 | | மீளச் செலுத்த வேண்டிய வைப்பு | 5,059,055.84 |
| 16,728,294.32 | 6 | காசு மற்றும் காசுக்கு நிகரானவை | 1,502,868.35 |
| 869,378.32 | | இலங்கை வங்கி - தப்ரபேன் கிளை கணக்கு இல. 2026495 | 408,710.35 |
| 313,445.37 | | இலங்கை வங்கி - தப்ரபேன் கிளை கணக்கு இல. 2026496 | 313,445.37 |
| 15,545,470.63 | | இலங்கை வங்கி - மெட்ரோபொலிடன் கிளை கணக்கு இல. 74757297 | 780,712.63 |
| 242,757,492.43 | 7 | சொத்துக்கள், தொழிற்கூடம் மற்றும் உபகரணம் | 21,687,724.43 |
| | | கிரயம் | |
| 26,371,050.30 | | வருட ஆரம்ப திகதி பெறுமதி | 26,816,845.97 |
| 4,950,000.00 | | ஜெர்னல் குறிப்பு இல.13 | 13,006,880.80 |
| 1,089,939.50 | | வருடத்தில் நீக்கப்பட்டவை ( நீக்கப்பட்ட சொத்துக்களின் கொள்விலை) | - |
| 13,006,880.80 | | வருடத்தில் மீள்மதீப்பீடு செய்தவை (மீள்மதிப்பீடு செய்த சொத்துக்களின் கொள்விலை) | - |
| | | ஜெர்னல் குறிப்பு இல.14 | (4,042,999.47) |
| 5,549,616.50 | | வருடத்தில் சேர்க்கப்பட்டவை | 4,723,525.71 |
| 4,042,999.47 | | கூட்டல் - மீள்மதிப்பீடு செய்த சொத்துக்களின் பெறுமதி | - |
| | | ஜெர்னல் குறிப்பு இல.27 | (1,522,660.00) |
| | | ஜெர்னல் குறிப்பு இல.31 | 11,650,000.00 |
| | | ஜெர்னல் குறிப்பு இல.32 | (13,839,820.00) |
| **26,816,845.97** | | | **36,791,773.01** |
| | | தேய்மானம் | |
| 18,260,078.13 | | வருட ஆரம்ப திகதி பெறுமதி | 12,922,438.54 |
| 971,211.29 | | நீக்கப்பட்ட சொத்துக்களின் தேய்மானத் தொகை | - |
| 9,756,149.13 | | மதிப்பீடு செய்த சொத்துக்களின் தேய்மானத் தொகை | - |
| 3,718,248.23 | | கூட்டல் - வருடத்திற்கான கட்டணம் | 4,674,977.50 |
| 1,671,472.60 | | ஜெர்னல் குறிப்பு இல.15 | 9,756,149.13 |
| | | ஜெர்னல் குறிப்பு இல.16 | 836,063.08 |
| | | ஜெர்னல் குறிப்பு இல.17 | (791,458.61) |
| | | ஜெர்னல் குறிப்பு இல.27 | (1,176,964.62) |
| | | ஜெர்னல் குறிப்பு இல.28 | 716,000.00 |
| | | ஜெர்னல் குறிப்பு இல.29 | (321,938.67) |
| | | ஜெர்னல் குறிப்பு இல.33 | (11,511,217.78) |

| | | | |
|---|---|---|---|
| - | | கழித்தல் - உரிய வருடத்தில் மாற்றியவை | - |
| 12,922,738.54 | | வருட இறுதி மொத்தப் பெறுமதி | 15,104,048.58 |
| | | தேறிய புத்தகப் பெறுமதி | |
| 13,894,407.43 | | வருட இறுதி மொத்தப் பெறுமதி | 21,687,724.43 |
| | | *(விபரத்திற்காக குறிப்பு இல.12-1 பார்க்கவும்)* | |
| 228,863,085.00 | | *வீட்டு புனரமைப்பிற்கான மூலதன மானியம்* | - |
| 868,865,242.00 | 8 | நீண்ட கால முதலீடுகள் | 883,630,000.00 |
| | | ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் | |
| 868,865,242.00 | | நிறுவனங்களுக்காக வழங்கப்பட்ட முதலீடு | 883,630,000.00 |
| | | *(விபரத்திற்காக குறிப்பு இல.13-1 பார்க்கவும்)* | |
| | 9 | புலப்படாத சொத்துக்கள் | 2,688,000.00 |
| | | கனணி தரவுத் தள நிகழ்ச்சி | 2,688,000.00 |
| 1,272,612,529.82 | | மொத்த சொத்துக்கள் | 952,447,480.09 |
| 2,296,494.97 | 10 | ஏனைய கொடுப்பனவுகள் | 906,774.68 |
| 1,565,023.67 | | தொகுக்கப்பட்ட செலவினம் | 865,108.68 |
| 731,471.30 | | வைப்புக் கணக்கு | 41,666.00 |
| 738,994,380.00 | 11 | ஒதுக்கல் மற்றும் ஏனைய வைப்பு | 738,844,380.00 |
| 738,544,380.00 | | ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட முதலீடு | 738,544,380.00 |
| 300,000.00 | | கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கம் | 300,000.00 |
| 741,290,874.97 | | மொத்த பொறுப்புக்கள் | 739,751,154.68 |
| 531,321,654.85 | | தேறிய சொத்துக்கள் | 212,696,325.41 |

## 2014.12.31 ஆண்டிறுதிக்கான நிதி முன்னேற்ற அறிக்கை தொடர்பான விபரம்

| 2013 (Rs.) | குறிப்பு | | 2014 (Rs.) |
|---|---|---|---|
| | | **வருமானம்** | |
| 237,029,000.00 | 1 | அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற வருமதிகள் | 365,347,000.00 |
| | | திறைசேரியின் கட்டுநிதி - மூலதனம் | |
| 237,029,000.00 | | திறைசேரியின் கட்டுநிதி - மூலதனம் | 365,347,000.00 |
| | | அமைச்சின் கட்டுநிதி - மூலதனம் | |
| | | அமைச்சின் கட்டுநிதி - மூலதனம் | |
| 13,948,205.53 | 2 | வட்டி | 16,657,400.00 |
| | | அரச ஈட்டு முதலீட்டு வங்கியிடமிருந்து ஆர்சீ மற்றும் ஆர்4, ஆர்சீ மற்றும் ஆர்8 கடன்களின் 3மூ வட்டி | |
| | | வழங்கப்படாத கடன் - அரச ஈட்டு முதலீட்டு வங்கி | |
| | | *நிதி நிறுவனங்களின் முதலீடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டி* | |
| 1,247,123.29 | | இலங்கை வங்கி | 945,972.60 |
| 1,956,978.08 | | மக்கள் வங்கி | 720,123.29 |
| 306,181.55 | | வீட்டு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 31,143.09 |
| 24,041.10 | | ஹற்றன் நெஷனல் வங்கி | - |
| 200,000.00 | | புதிய அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் முதலீடு | 200,000.00 |
| 1,857,534.08 | | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 1,829,339.92 |
| 4,856,032.44 | | இலங்கை வங்கி புதிய சுயதொழில்கடன் திட்டம் | 5,379,870.00 |
| | | இலங்கை வங்கி புதிய வீட்டுக்கடன் திட்டம் | 791,225.07 |
| 401,241.19 | | சேமலாப முதலீட்டின் வட்டி | 584,494.31 |
| | | *அலுவலர் சபை கடனுக்கான வட்டி* | |
| 459,844.05 | | சொத்துக் கடன் | 416,076.50 |
| 209,091.59 | | அனர்த்தக் கடன் | 225,582.98 |
| 2,689.74 | | விஷேட முற்பணம் | 2,249.10 |
| 2,427,448.42 | | சேமிப்புக் கணக்கு | 5,531,323.36 |
| 17,625.00 | | | 10,200.00 |
| 17,625.00 | | ஏனைய வருமானம் | 10,200.00 |
| (71,853.21) | | | - |
| (71,853.21) | | நீக்கப்பட்ட சொத்துக்களின் பற்றாக்குறை விற்பனையும் | - |
| 250,922,977.32 | | மொத்த வருமானம் | 382,014,600.22 |
| | | செலவினம் | |

| | | |
|---|---|---|
| **27,833,773.22** | **3 ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன்** | **33,149,376.84** |
| 12,786,075.79 | அலுவலர் சபை சம்பளம் | 13,891,926.54 |
| 2,450,236.87 | ஊழியர் நன்கொடை நிதியம் | 2,822,939.97 |
| 612,559.21 | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 705,767.49 |
| - | ஓய்வூதிய நிதியம் | - |
| 506,141.25 | மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறைக்கால கொடுப்பனவு | 431,079.39 |
| 4,679,224.00 | வாழ்வாதாரக் கொடுப்பனவு | 5,869,320.86 |
| 600,000.00 | தலைவருக்கான படிகள் | 600,000.00 |
| 480,000.00 | செயற்பாட்டுப் பணிப்பாளருக்கான படிகள் | 480,000.00 |
| 80,000.00 | பணிபப்பாளர் சபையினருக்கான படிகள் | 44,000.00 |
| 64,000.00 | கணக்காய்வு முகாமைத்துவ கமிட்டி கூட்டத்திற்கான படிகள் | 44,000.00 |
| 48,000.00 | பணிபப்பாளர் சபையின் செயலாளருக்கான படிகள் | 48,000.00 |
| - | எரிபொருள் கொடுப்பனவு | 1,443,495.00 |
| 1,170,000.00 | வாகன வாடகைக் கட்டணம் | 1,080,000.00 |
| 2,202,459.65 | விஷேட கொடுப்பனவுகள் | 2,702,898.45 |
| - | இடைக்கால கொடுப்பனவுகள் | 357,050.00 |
| 710,932.70 | ஏனைய கொடுப்பனவுகள் | 751,333.47 |
| 96,739.73 | மொழித்திறன் கொடுப்பனவு | 101,373.34 |
| 1,347,404.02 | சேமலாப செலவினம் | 1,776,192.33 |
| **193,893,757.99** | **4 மானியம் மற்றும் ஏனைய மாற்றீடு கொடுப்பனவு** | **319,441,211.61** |
| | *இறப்பு காயத்திற்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு* | |
| 6,750,000.00 | அரச ஊழியர் | 1,200,000.00 |
| 88,264,000.00 | பொது மக்கள் | 148,739,750.00 |
| - | கூட்டுத்தாபன, கூட்டுறவு ஊழியர்கள் | - |
| - | தேர்தல் வன்செயல் காரணமாக பாதிப்புற்றோர் | - |
| - | விஷேட தரத்தினர் | - |
| | பாதிப்படைந்த சொத்திற்கான நட்டஈடு வழங்கல் | |
| 41,761,645.00 | அரச ஊழியர் | 65,542,328.00 |
| 40,957,085.00 | பொது மக்கள் | 57,515,660.00 |
| 10,361,564.00 | சுயதொழில் பயிற்சி வழங்கல் | 20,007,312.00 |
| - | பேருவளை வன்செயல் | 19,104,119.00 |
| 1,529,951.99 | கடன் மேற்பார்வை நிகழ்ச்சி | 1,361,427.06 |
| 739,228.80 | சுயதொழில் பயனாளிகளுக்கான பயிற்சிநெறி | 1,060,882.20 |
| 3,530,283.20 | நட்டஈடு | 4,909,733.35 |
| **3,539,902.33** | **5 விநியோகம் மற்றும் நுகர்வோர் பாவனை** | **1,450,410.29** |
| 1,037,592.78 | காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 947,955.39 |

| | | |
|---|---|---|
| 2,310,194.55 | மசகு மறறும் எரிபொருள் | 331,585.00 |
| 79,380.00 | சிருடைகள் | 58,459.90 |
| 112,735.00 | புதினப்பத்தரிகை மற்றும் சஞ்சிகைகள் | 112,410.00 |
| | | |
| **3,718,248.24** | **6 தேய்மானம்** | **5,069,038.83** |
| 2,787,293.84 | மோட்டார் வாகனங்களுக்கான தேய்மானம | 2,831,720.42 |
| 141,400.09 | தளபாடம், அலுவலக உபகரணம் மற்றும் பொருத்துதிகளுக்கான தேய்மானம் | 431,527.91 |
| 116,196.00 | அறைகளாகப் பிரித்தலுக்கான தேய்மானம் | 716,000.00 |
| 5,632.30 | தொலைபேசிக்கான தேய்மானம் | 29,503.42 |
| 198,676.55 | கருவிகளுக்கான தேய்மானம் | 151,471.34 |
| 258,290.58 | கணனிகளுக்கான தேய்மானம் | 491,736.02 |
| 210,758.88 | குளிருட்டிகளுக்கான தேய்மானம் | 417,079.72 |
| | | |
| | **7 கடன் தீர நிதி சேர்த்தல்** | 11,999,500.00 |
| | நிரந்தர வீடமைப்பு உதவி | 11,999,500.00 |
| | | |
| | **8 அறவிட முடியாக்கடன்** | 108,056,142.74 |
| | அறவிட முடியாக்கடன் இலங்கை வங்கி ரூ.200,000 கடன் | 60,605,257.44 |
| | அறவிட முடியாக்கடன் இலங்கை வங்கி ரூ.10,000 கடன் | 8,360,536.09 |
| | அறவிட முடியாக்கடன் இலங்கை வங்கி ரூ.200,000 கடன் | 894,430.21 |
| | அறவிட முடியாக்கடன் தே.வீ.அ.அ.சபையின் வட்டி | 38,195,919.00 |
| | | |
| **2,639,710.10** | **9 நிலையான சொத்துக்களை பராமரித்தல்** | **3,254,944.97** |
| 900,804.33 | நிலையான சொத்துக்களை பராமரித்தலும் புதுப்பித்தலும் | 492,825,87 |
| 1,682,406.77 | வாகனங்களை பராமரித்தலும் புதுப்பித்தலும் | 1,945,397.72 |
| 56,499.00 | கட்டிட பராமரித்தல் செலவினம் | 471,026.00 |
| | அறைகளாகப் பிரக்கும்போது இழந்தவை | 345,695.38 |
| | | |
| **11,662,277.70** | **10 ஏனைய செலவினங்கள்** | **18,413,282.83** |
| 195,462.68 | பிரயாணச் செலவினம் - உள்ளுர் | 64,669.80 |
| 53,600.00 | பிரயாணச் செலவினம் - வெளியூர் | - |
| 475,711.31 | தொலைபேசிக் கட்டணம் | 596,041.95 |
| 465,903.00 | தபால் கட்டணம் | 457,800.00 |
| 1,002,031.96 | மின்சாரம் மற்றும் ஏனைய செலவினம் | 1,344,582.65 |
| 5,528,400.00 | வாடகை | 9,853,200.00 |
| 731,836.00 | அச்சிடல் கட்டணம் | 356,714.12 |
| 205,761.41 | விருந்தோம்பல் கட்டணம் | - |
| 150,000.00 | கணக்காய்வுக் கட்டணம் | 184,656.00 |
| 151,500.00 | கருத்தரங்கு மற்றும் கூட்ட அமர்வு | 1,107,680.00 |
| 434,612.04 | ஊழியர்களின் வைத்தியக் காப்புறுதி | 670,282.55 |

| | | |
|---|---|---|
| 1,019,615.93 | நானாவித செலவினம் | 95,551.12 |
| 320,404.45 | நலன்புரிச் சங்கம் | 643,375.47 |
| 602,438.92 | நடமாடும வைபவ நிகழ்வு | 1,220,608.17 |
| - | உள்ளக அமைச்சு மற்றும் ஏனையவை | 916,015.00 |
| 325,000.00 | நிதிக் கட்டணம் | 589,866.00 |
| | தேடல் மற்றும் அபிவிருத்தி | 312,240.00 |
| 216,980.58 | 11 நிதிக் கிரயம் | 442,505.87 |
| 216,980.58 | வங்கிக் கட்டணம் - WHT 10% | 442,505.87 |
| | வரிக் கட்டணத்திற்கான வட்டி | |
| | தேசிய அபிவிருத்தி வங்கியின் வட்டி | |
| 243,504,650.16 | மொத்த செலவினம் | 501,276,413.98 |
| 7,418,327.16 | உரிய காலத்தின் மிகை/பற்றாக்குறை | (119,261,813.76) |

2014.12.31 திகதியில் முடிவடைந்த ஒன்றிணைந்த நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முதலீடு

| நிறுவனம் | பேரேட்டுப் பக்கம் | வீட்டுக் கடன் | கைத்தொழில் கடன் | சுயதொழில் கடன் | புதிய வீடமைப்புகடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 38, 43 | 5,000,000.00 | 31,000,000.00 | 570,487,000.00 | 108,991,000.00 | 715,478,000.00 |
| மக்கள் வங்கி | 53 | 37,200,000.00 | | | | 37,200,000.00 |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 51 | 120,952,000.00 | | | | 120,952,000.00 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 47 | 10,000,000.00 | | | | 10,000,000.00 |
| மொத்தம் | | 173,152,000.00 | 31,000,000.00 | 570,487,000.00 | 108,991,000.00 | **883,630,000.00** |

குறிப்பு இல.13 -2

2014.12.31இல் நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் வட்டி

| நிறுவனம் | பேரேட்டுப் பக்கம் | மொத்தம் ரூபா |
|---|---|---|
| இலங்கை வங்கி | 23 | 945,972.60 |
| மக்கள் வங்கி | 25 | 720,123.29 |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 33 | 38,195,919.00 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 31 | 31,225.28 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 29 | 178,270.84 |
| இலங்கை வங்கியின் புதிய கடன் திட்டம் | 36 | 6,171,095.11 |
| **மொத்தம்** | | **46,242,606.12** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. JP/A/REPPIA/1/14/16 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 30 July 2015

தலைவர்,

ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்பு அதிகாரசபை

**ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்பு அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்பு அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 8(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கணக்காய்வு கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2015 யூன் 10 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்பு அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு முடிவடைந்த நிலையான சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரித்தாக செலுத்த வேண்டிய ரூபா 300,000 கணக்காய்வுக் கட்டணம் நடைமுறைப் பொறுப்பாக காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறையல்லாத பொறுப்பாக நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தி | பதவியணியினரின் பல்வேறு தரங்களின் கடமைகளுக்காக திறைசேரி அங்கீகாரமின்றி ரூபா 156,787 தொகையான விசேட படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (I) நிதிப்பிரமாணம் 136 | செலவினங்களை மேற்கொள்வதற்கு முன்னர் அதற்காக முறையான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 10 சந்தர்ப்பங்களில் சில்லறைக் கட்டுநிதியிலிருந்து ரூபா 850 முதல் 8,596 தொகையான வீச்சில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (II) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ),(இ) | (i) பதவிநிலை உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 20,000 இற்கு மேற்படாத செயல்நிமித்த உப கட்டு நிதி வழங்க முடியுமாக இருந்த போதிலும் அந்த எல்லையை விஞ்சி ஆறு உத்தியோகத்தர்களுக்கு 76 சந்தர்ப்பங்களின் போது ரூபா 25,000 முதல் ரூபா 225,000 வரையான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்ட கருமம் நிறைவேற்றப்பட்ட உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 40 சந்தர்ப்பங்களில் 04 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களைத் தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் ரூபா 5,000 முதல் ரூபா 125,000 தொகைக்கு இடையே முற்பணங்கள் |

வழங்கப்பட்டிருந்தன. மேலும் ஒரே செயற்பாட்டிற்காக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன.

(III) நிதிப்பிரமாணம் 385

ரூபா 500 இற்கு மேற்பட்ட ஒவ்வொரு கொடுப்பனவும் காசாக செலுத்தக்கூடாத போதிலும், அதற்கு புறம்பாக 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,000 முதல் ரூபா 59,620 வரையான வீச்சில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(IV) நி.பி. 396 (ஈ)

வழங்கப்பட்டு எனினும் வங்கிக்கு கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 629,265 பெறுமதியான 18 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 119,261,813 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,418,327 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 126,680,140 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

அதிகாரசபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பயங்கரவாத செயற்பாடுகளின் காரணமாக நிர்க்கதிக்குள்ளானவர்களுக்கு புனர்வாழ்வழிப்பதற்கு நான்கு கடன் செயற்திட்டங்களின் கீழ் ரூபா 735,000,000 கடன் பணம் 4,919 நலனாளிகளுக்கு வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 516 நலனாளிகளுக்காக மாத்திரம் ரூபா 79,649,000 ஆன கடன் வழங்கப்பட்டிருந்தது. எதிர்பார்த்த இலக்குகளுடன் ஒப்பிடும் போது சுயதொழில்களுக்காக கடன் வழங்கல் 36 சதவீதமும் வீடுகளுக்காக 44 சதவீதமும் கைத்தொழில்களுக்காக 25 சதவீதமும் சமூகமயப்படுத்திய பயிலுனர்களுக்காக சுயதொழில் கடன் 2 சதவீதமுமாக குறைந்த செயன்முன்னேற்றமொன்று அடையப் பெற்றிருந்ததுடன் அவற்றின் ஒட்டுமொத்த கடன் வழங்கல் 11 சதவீதமாக இருந்தன.

4.2 முகாமைத்துவ செயற்திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் ஒன்றிணைந்த மானிய உதவித் திட்டத்தின் கீழ் கடன் வசதிகளை வழங்கும் நோக்கில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் உடன்படிக்கை கால எல்லை முடிவடைந்திருந்த போதிலும் அறவிடுவதற்கிருந்த ரூபா 120.2 மில்லியனான முதலீட்டு தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாட்டில் ஏற்பட்ட உள்ளக பிணக்குகளின் அடிப்படையில் சொத்துக்களை நாளதுவரையாக்குவதற்கும் சுயதொழிலுக்காகவும் 1983 ஆம் ஆண்டின் போது நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 76,631,093 தொகையான கடன் பணம் இதுவரை அறவிடப்படாததுடன் அதனைப் பதிவழிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரமொன்று 2010 ஆம் ஆண்டின் நவம்பர் 09 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை வங்கியூடாக 1983 யூலை கலவரம் காரணமாக நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட வர்த்தக கடன் ரூபா 4,472,151 தொகை மீள அறவிடப்பட வேண்டிய காலம் கடந்திருந்த போதிலும் கடன் மீள அறவீடுகளின் செயன்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) 2009 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளாகிய வாகனத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 44,300 தொகையான இழப்பீட்டை அறவிடுவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் அலுவலக கட்டிடத்திற்காக மின் இணைப்புத் திருத்தத்திற்காகவும் ஏனைய செலவினத்திற்காகவும் செலவிடப்பட்ட ரூபா 74,056 தொகை வாடகை உரிமையாளரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபையின் முன்னைய அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டிருந்த கட்டிடத்திலிருந்து வெளியேறி ஓராண்டு காலம் கடந்திருந்த போதிலும் வாடகைக்காக செலுத்தப்பட்டிருந்த 475,000 ஆன வைப்புப் பணத்தை குத்தகையாளரிமிருந்து அறவிடுவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கணனி தரவுத்தள முறைமையொன்றை அதிகாரசபையில் தாபிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,688,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக் கணனி தரவுத்தள முறைமை இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டில் நலனாளிகளுக்கு இழப்பீட்டைச் செலுத்துவதற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 396,347,000 நிதி ஒதுக்கீடு கிடைத்திருந்ததுடன் அப்பணத்திலிருந்து மரணம், காயம் மற்றும் சொத்து இழப்பீடு செலுத்துவதற்காக ரூபா 312,109,169 தொகை செலவிடப்பட்டிருந்தது. நலனாளிகளுக்காக காசோலை கையளிக்கும் நிகழ்வுச் செலவினம் மற்றும் உணவுகளுக்கு ரூபா 4,080,889 தொகையும் எரிபொருள் உட்பட போக்குவரத்துச் செலவினமாக ரூபா 828,844

தொகையும் செலவிடப்பட்டு அச்செலவினம் இழப்பீட்டுக் கொடுப்பனவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிலும் இவ்வாறான செலவினத்திற்காக ரூபா 3,082,589 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

அதிகாரசபையின் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்வதற்காக மாத்திரம் கணனி நிகழ்ச்சித்திட்டமொன்று உள்ளடக்கப்பட்ட மென்பொருளொன்று 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை குறித்த செயற்பாட்டிற்காக நாளதுவரையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபை வாடகைக்கு எடுத்திருந்த அலுவலக கட்டிடத்திற்கு மாதாந்த வாடகை (பெறுமதி சேர் வரி இல்லாமல்) ரூபா 750,000 ஆக இருந்த போதிலும், அதற்கு முன்னர் வாடகைக்கு எடுத்திருந்த கட்டிடத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 425,000 ஆக இருந்தமையால் முன்னைய கட்டிடத்தை விட 75 சதவீதமான அளவு வாடகைக் கொடுப்பனவில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்படாத தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,220,608 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாமல் இருந்ததுடன், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அதிகாரசபையின் சகல கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வீடமைப்பு கடன் மற்றும் இழப்பீட்டு உதவிச் செயற்திட்டங்கள்

(உ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

பத்தரமுல்லை.

<u>ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபையின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவுக்கு அமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</u>

மேலுள்ள விடயம் தொடர்பக உங்களினால் எனக்கு அனுப்பப்பட்ட JP/A/REPPIA/1/14/16 ஆம் இலக்க 2015 யூலை 30 ஆம் திகதிய அறிக்கை தொடர்பான எனது அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

<u>2. நிதிக் கூற்றுக்கள்</u>

<u>2.2 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துக்கள்</u>

2.2.1 2015 ஆம் ஆண்டில் சகல நிலையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் விலைமதிப்புத் திணைக்களத்தின் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த அறிக்கை இதுவரை விலைமதிப்புத் திணைக்களத்திடமிருந்து கிடைக்கவில்லை. விலை மதிப்புத் திணைக்களத்திடமிருந்து மேற்படி அறிக்கை கிடைத்தவுடன் அதற்கமைய கணக்குகள் மற்றும் நிலையான சொத்துக்களின் பதிவேட்டை இற்றைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

2015 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலம் சரியானமுறையில் நிதி நிலைமைகளை வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வேன்.

<u>2.3 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கியொழுகாமை</u>

(அ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு ஒரு மாதத்திற்கு 05 நாட்கள் எனும் உச்சளவுக்கு உட்பட்டு குறித்த கடன் திட்டத்திற்குப் பெற்றுக் கொள்ளும் 1% ஆன சேவைக் கட்டணத்தை பயன்படுத்தி இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. கடன் திட்டம் தொடர்பான வெளிக்கள கடமைகளின் அசௌகரியமானதன்மையை மாத்திரம் கவனத்தில் கொண்டு இந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது தற்போது குறித்த கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) (i) நி.பி. 136

நிறுவனத்தின் சில்லறைக் காசு மூலம் செலவினங்களைச் செய்யும் போது தற்போது பணிப்பாளர் சபையினால் 2015 ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ரூபா 5,000.00 ஆன உச்சளவுக்கு உட்பட்டு சில்லறைக் காசுச் செலவினங்களைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கமைய ரூபா 20,000 ஆன சில்லறைக் காசு முற்பணத்தை பேணிவருவதற்கு கணக்குகள் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது முறையாக அவ்வவ் பிரிவுகளின் தேவைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு ஏற்ப கணக்காளரினால் சான்றுப்படுத்தப்பட்ட பின்னர் குறித்த நிதி செலவிடப்படும்.

(ii) நி.பி. 371 (2)(அ),(ஆ)

(i) மற்றும் (ii)

உச்ச வரையறையான ரூபா 20,000.00 எனும் வரையறை கடமைகளை மிகவும் விளைதிறனுடன் மேற்கொள்வதற்குப் போதுமானதல்ல. அதற்கமைய ஆகக் குறைந்த நிதித் தேவைகளைக் கவனத்தில் கொண்டு அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக முற்பணம் பெற்றுக் கொள்ளச் செயற்படமாட்டேன். நடைமுறை நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளும் போது இந்த வரையறைக்குள் செயற்படுவது மிகவும் சிக்கலானதென்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். மேலும் தற்போது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒரு முற்பணத்தை தீர்த்துவைக்க முன்னர் மற்றொரு முற்பணம் வழங்காதிருக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iii) நி.பி. 385

இதன் போது சில்லறைக் காசுச் செலவினத்தை விட அதிகமான தொகையைத் தாங்கிக் கொள்ளும் போது முறையாக காசோலை மூலம் கொடுப்பனவுகளைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் தவிர ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் காசோலை மூலம் உரிய கொடுப்பனவுகளைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்வேன்.

(vi) நி.பி. 396 (ஈ)

உரிய நிதிப் பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் பெறுபேறு

அவதானிப்புக்கள் சரியானவை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) கடன் திட்டங்களில் போதியளவு முன்னேற்றம் இல்லை எனும் கணக்காய்வு வினா.

புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான சுயதொழில்வாய்ப்புக்கான கடன் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கென 525 மில்லியன் ரூபா ஆன தொகை 2014 ஆம் ஆண்டின் செயல்ரீதியான திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் அப்போது காணப்பட்ட சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் கீழ் மேற்படி இரண்டாம் கட்டத்தை அமுல்படுத்துவதற்கான சகல திட்டங்களும் தயார் செய்யப்பட்டு உரிய வங்கி நிறுவனங்களுடன் கலந்துரையாடியதுடன் மேற்படி நிறுவனங்களின் இணக்கப்பாடும் பெறப்பட்டிருந்தது. மேலும் அவ்வவ் வங்கி நிறுவனங்கள் மூலம் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த தொகைகள் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| மக்கள் வங்கி | 175 மில்லியன் |
| இலங்கை வங்கி | 175 மில்லியன் |
| இலங்கை சேமிப்பு வங்கி | 75 மில்லியன் |
| லங்கா புத்ர வங்கி | 100 மில்லியன் |

எவ்வாறாயினும் குறித்த வங்கிகளுடன் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கான வரைவுகள் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டின் இறுதி வரை வங்கிகளிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை.

எனினும், 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அப்போதைய அரசாங்கம் மாற்றமடைந்ததன் காரணமாக திறைசேரியின் பணிப்பாளர் நாயகத்துடன் (அபிவிருத்தி மற்றும் நிதி) நடைபெற்ற கலந்துரையாடலின் போது, புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றமடைந்துள்ளதன் காரணமாக மீண்டும் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுமாறு நாம் தெரிவித்தோம். இதனை அடுத்து உரிய அமைச்சரவை அங்கீகாரம் 2015 பெப்ருவரி மாதம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த பணிப்பாளர் நாயகத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது திறைசேரி, வங்கி அதிகாரிகள் மற்றும் தவிசாளர்களின் பங்கேற்புடன் கூட்டமொன்றை ஒழுங்கு செய்து இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தீர்மானம் மேற்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. எனினும் இதுவரை திறைசேரி மற்றும் உரிய வங்கிகளுடன் மேற்படி கலந்துரையாடலுக்கான திகதியொன்று வழங்கப்படவில்லை. எனினும், நிதி அமைச்சின் ஆலோசகரான திரு பாஸ்கரலிங்கத்திடம் கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கலந்துரையாடலை நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளேன்.

**வீடமைப்புக் கடன் திட்டம்**

2014.01.01ஆம் திகதியளவில் வீடமைப்புக் கடன் திட்டத்திற்காக இலங்கை வங்கியிடம் காணப்பட்ட நிதியின் அளவு 12 மில்லியன் ரூபாவாகும். 2014.09.15 ஆம் திகதியன்று மேலதிகமாக 28 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டுக்கு வீடமைப்புக் கடன் திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளத்தக்க மொத்தத் தொகை 40 மில்லியன் ரூபாவாகும். மேற்படி தொகைக்காக பயனாளிகள் 176 பேர் சிபாரிசு செய்யப்பட்டார்கள் என்பதுடன், அதன் பெறுமதி ரூபா 39,750,000 ஆகும். எனினும் வங்கியினால் விடுவிக்கப்பட்டிருப்பது ரூபா 17,700,000 மாத்திரமாகும். இது 44% ஆகும். அதற்கமைய 2014.09.15 ஆம் திகதி வழங்கப்பட்ட தொகையில் 3 மாதங்கள் எனும் குறுகிய காலப்பகுதிக்குள் மொத்தத் தொகையையும் கடனாக வழங்குவதற்கு குறித்த வங்கிக்கு போதியளவு காலம் இல்லாமை காரணமாக இந்நிலை எழுந்துள்ளது. எதிர்காலத்தில் இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக முன்கடன் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் திருப்திகரமான முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளதென்பதையும் அறியத்தர விரும்புகின்றேன்.

**சுயதொழில்வாய்ப்புக் கடன் திட்டம்**

2014 இன் செயல்ரீதியான திட்டத்திற்கு அமைய சுயதொழில்வாய்ப்புக் கடன் திட்டத்தின் கீழ் பயனாளிகள் 1000 பேருக்கு 100 மில்லியன் ரூபாவை கடனாக விடுவிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், கடன் வழங்கும் ஆற்றல் கிடைத்திருப்பது 434 பயனாளிகளுக்கு 58.04 மில்லியன் ரூபாவை மாத்திரமாகும். இதற்கான காரணம் கடன் அறவிட்டுக் கொள்வதிலுள்ள அசௌகரியங்கள் மற்றும் கடனுக்கான பிணைதாரர்கள் தொடர்பாக கடும் ஒழுங்குமுறைகள் பின்பற்றப்பட்டமை போன்ற விடயங்கள் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் புனர்வாழ்வு அதிகார சபை 2014 ஆம் ஆண்டில் பயனாளிகள் 2353 பேருக்கு ரூபா 324,210,000 ஆன தொகையை வங்கிகளுக்கு சிபாரிசு செய்துள்ளது.

இந்த ஆண்டின் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வதுடன், அதற்கான பரிகாரமாக முன் கடன் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டம் 2014 டிசம்பர் மாதம் முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது வெற்றிகரமான பெறுபேறுகளை

அடையப்பெற்றுள்ளதுடன், 2015 சனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை 280 கடன் கோப்புக்களுக்கான கடன் தொகையாக ரூபா 41,118,000 ஆன தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை வங்கியின் பிரதம முகாமையாளருடன் கலந்துரையாடப்பட்டதுடன், கடனை விடுவிப்பதிலுள்ள தாமதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கைத்தொழில் கடன் திட்டம்**

கைத்தொழில் கடன் திட்டத்தின் கீழ் 2014 இன் செயல்ரீதியான திட்டத்திற்கு அமைய 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கான கடன் சிபாரிசுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் ஒரு கடன் விடுவிக்கப்பட்டதுடன், அதன் பெறுமதி ரூபா 2,500,000 ஆகும். மேலும் 2014 டிசம்பர் மாதத்தில் சிபாரிசு செய்யப்பட்ட ஒரு கைத்தொழில் கடனுக்காக 2015 பெப்ருவரி மாதத்தில் 5 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கைத்தொழில் கடன் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள தொகை 2.5 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன், மேற்படி தொகைக்கும் தற்போது கடன் சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது. இதனை இந்த ஆண்டுக்குள் விடுவிக்க முடியுமென்று எதிர்பார்க்கின்றேன்.

(ஆ) தற்போது முறையாக சர்வர் இயந்திரம் பொருத்தப்பட்டு கணனித் தரவுக் கட்டமைப்பு தயார் செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு பரீட்சார்த்த மட்டத்தில் பேணிவரப்படுகின்றது. எவ்வாறாயினும் போதியளவு முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

<u>4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை</u>

(அ) புனர்வாழ்வு அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து அமுல்படுத்திய வீடமைப்புக் கடன் வேலைத்திட்டத்தின் கீழ் 128 மில்லியன் ரூபா தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகைக்கான உடன்படிக்கைக்கு அமைய காலம் பூர்த்தியடைந்துள்ள போதிலும் இதனைத் திருப்பிச் செலுத்தாமை தொடர்பாக 2011 யூன் 29 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அரசாங்க தொழில்முயற்சிகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அறவிட வேண்டியுள்ள வட்டியைப் பதிவழிப்புச் செய்தேனும் முதலீடு செய்துள்ள தொகையை பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்யுமாறு இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடி குறித்த தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு ஆரம்பத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய 128 மில்லியன் ரூபா ஆன தொகையில் இதுவரை புனர்வாழ்வு அதிகார சபைக்கு மீளச் செலுத்தப்பட்டுள்ள கடன் அறவீடுகள் பற்றிய விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 2011.04.07 | 421,000.00 |
| 2011.06.29 | 515,000.00 |
| 2011.09.22 | 375,000.00 |
| 2011.11.01 | 337,000.00 |
| 2011.12.30 | 339,000.00 |
| 2012.03.12 | 284,000.00 |
| 2012.04.17 | 205,000.00 |
| 2012.06.15 | 376,000.00 |
| 2012.09.10 | 545,000.00 |
| 2013.01.31 | 426,000.00 |
| 2013.02.20 | 155,000.00 |
| 2013.09.05 | 809,000.00 |
| 2014.03.05 | 421,000.00 |
| 2014.03.28 | 634,000.00 |
| 2014.08.06 | 422,000.00 |
| 2014.09.09 | 784,000.00 |
| 2015.02.16 | 745,000.00 |
| 2015.05.19 | 317,000.00 |
| 2015.08.13 | 175,000.00 |
| மொத்தம் | 119,715,000.00 |

இதற்கமைய கிடைக்க வேண்டிய நிலுவையில் ரூபா 8,285,000.00 ஆன தொகை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து இதுவரை கிடைத்துள்ளது.

இவ்வாறு குறித்த தொகையை மீளப் பெற்றுக் கொள்ள நீண்டகாலம் எடுப்பதன் காரணமாக தற்போது புனர்வாழ்வு அதிகார சபையும், இலங்கை வங்கியும் அமுல்படுத்துகின்ற வீடமைப்புக் கடன் திட்டத்தை மென்மேலும் விஸ்தரித்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் மேலே குறிப்பிடப்பட்ட செலுத்த வேண்டியுள்ள எஞ்சிய தொகையைப் பயன்படுத்தி வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுலுப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளன. இது பற்றிய கலந்துரையாடலொன்று 2012.11.02 ஆம் திகதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தவிசாளருடன் நடாத்தப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபியனால் எமக்கு இணைந்த வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் இதுவரை வழங்க வேண்டியுள்ள நிலுவைத் தொகை ரூபா 120,207,000.00 ஆகும். இது பற்றி குறித்த நிறுவனத்திற்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு 2010.12.10 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இது தொடர்பாக 2012.11.15 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவின் ஆலோசனையின் பேரில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து புனர்வாழ்வு அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள தொகையைப் பயன்படுத்தி இணைந்த கடன் நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இணக்கப்பாடு தொடர்பாக பணிப்பாளர் சபையின் தீர்மானமோ அல்லது சாதகமான பதிலோ இதுவரை கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் உள்ளடங்கலாக உயர் மட்ட அதிகாரிகளுடன் 2015.10.12 ஆம் திகதி நடாத்தப்பட்ட புனர்வாழ்வு அதிகார சபையின் தவிசாளர் உள்ளிட்ட பதவிநிலை அலுவலர்கள் பங்கேற்ற கூட்டத்தின் போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர்கள் தெரிவித்த கருத்து தற்போது புதிய கடன் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கேனும் ஒரே தடவையில் குறித்த மொத்தத் தொகையையும் செலுத்துவது கடினம் என்பதாகும். மேலும் அடிக்கடி கடன்பெற்றவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளப்படுகின்ற நிதியை புனர்வாழ்வு அதிகார சபையிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், எதிர்காலத்தில் இந்த மொத்தத் தொகையையும் அதிகார சபைக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக திறைசேரியூடாக வசதிகளைச் செய்து கொள்வதற்கு எழுத்து மூலம் அவர்களை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட நிதியத்தின் நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய தற்போது வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டு வருவதுடன், 2011 அரசாங்க தொழில்முயற்சிகள் குழுவின் அறிக்கைக்கு அமைய அறவிட்டுக் கொள்ளப்படவுள்ள குறித்த தொகையை புதிய வீடமைப்புக்

கடன் திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தொடர்ந்தும் இணங்காத பட்சத்தில் மேற்படி தொகையையும், அறவிடப்பட வேண்டியுள்ள வட்டியையும் அறவிட்டுக் கொள்ள சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஆ) குறித்த ஆண்டில் இந்த மொத்தத் தொகைக்கும் ஐயக் கடன் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நிதிப் பிரமாணங்களுக்கு அமைய திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்தவுடன் குறித்த நிலுவையை கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிக் கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

(இ) மேற்படி கடன் தொகையை அறவிடுவது மந்தகதியில் இடம்பெறுவதுடன், 2015 சனவரி மாதத்தில் இத்தொகையில் சிறிதளவு அறவிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டு அதிகார சபையின் இறுதிக் கணக்குகள் மூலம் இந்தக் கடன் தொகைக்கு 20% ஆன ஐயக் கடன் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கடனை அறவிட்டுக் கொள்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) குறித்த வாகனம் விபத்துக்குள்ளான பின்னர் புதுப்பித்தலுக்காக கராஜுக்கு அனுப்பப்பட்டதுடன், கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருப்பது கராஜில் புதுப்பித்தல்களுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகையாகும். மேற்படி தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக காப்புறுதிக் கம்பனியிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், காப்புறுதிக் கம்பனியினால் நிறுவனத்திற்கு மீள்நிரப்புச் செய்யப்பட்டிருப்பது ரூபா 44,300.00 குறைவாகவாகும். இதன் காரணமாக மேற்படி தொகையை காப்புறுதிக் கம்பனி எவ்வகையிலும் எமக்குச் செலுத்த வேண்டிய கடப்பாடு இல்லை. இந்த விடயத்தைக் குறிப்பிட்டு பணிப்பாளர் சபையில் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அங்கீகாரம் கிடைத்தவுடன் அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வேன். புணிப்பாளர் சபையில் விடயவிளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து குறித்த செலவினத்தைப் பதிவழிப்புச் செய்ய அங்கீகாரம் கிடைத்துள்ளது.

(உ) குறித்த தொகையானது, வாடகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய செலவினமொன்றல்ல என்பதுடன், இந்தத் தொகையானது நிறுவனத்திற்கு மின்சாரம் பெற்றுக் கொள்வதற்காக மின்சார சபை மற்றும் கொழும்பு மாநகர சபையில் நிறுவனத்தின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், மீளப்பெற்றுக் கொள்ளத்தக்க வைப்பொன்றாகும். இதில் கொழும்பு மாநகர சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 8,912.25 ஆன வைப்புத் தொகை 2015.07.09 ஆம் திகதிய 406966 ஆம் இலக்க காசோலை மூலம் எமக்கு பெற்றுத்தரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மின்சார சபையிலுள்ள ரூபா 61544.00 ஆன வைப்புத் தொகையை எமது நிறுவனம் வேறொரு இடத்திற்குக் கொண்டுசெல்லப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பது உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ) குறித்த கட்டிடத்திற்காக அறவிட்டுக் கொள்ளப்படவுள்ள தொகை சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளின் ஊடாக தீர்வொன்றை எட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(எ) தற்போது முறையாக சர்வர் இயந்திரம் பொருத்தப்பட்டு கணனித் தரவுக் கட்டமைப்பு தயார் செய்யப்பட்டு இற்றைப்படுத்தி பரீட்சார்த்த மட்டத்தில் பேணிவரப்படுகின்றது. போதியளவு முன்னேற்றமும் அடையப்பெற்றுள்ளது.

## 4.3 கருத்து முரண்பாடுகளுக்குக் காரணமாகின்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சனாதிபதியின் தலைமையில் நட்டஈடு செலுத்தும் வைபவத்தை நடாத்தவும், அவ்வவ் மாவட்டங்களில் விடயப் பொறுப்பு அமைச்சரின் தலைமையில் நட்டஈடு செலுத்தும் வைபவத்தை நடாத்துவதற்குமான செலவினத்தை தாங்கிக் கொள்ளத் தேவையான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும் போது சிக்கலான நிலைமை காணப்படுவதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு தொடர்பான வரவு செலவுத்திட்டப் பிரேரணைகள் பற்றிய கலந்துரையாடலின் போது விடய விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து, பொதுத் திறைசேரி சார்பாக மேற்படி கலந்துரையாடலில் பங்கேற்ற திறைசேரியின் பிரதிச் செயலாளரை அறிவுறுத்தியதை அடுத்து மேற்படி செலவனத்தை நட்டஈட்டுக்காக வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் மூலம் தாங்கிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று அறிவிக்கப்பட்டது. மேற்படி செலவினத்தையும் உள்ளடக்கியதாக 2014 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடு அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இது நட்டஈட்டைச் செலுத்துவது தொடர்பான செலவினமாகும்.

## 4.4 குறைப் பயன்பாட்டுச் சொத்துக்கள்

நிறுவனத்தின் அலுவலர்கள் பல தடவைகள் இந்த மென்பொருளைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதுடன், குறித்த மென்பொருளைப் பயன்படுத்திய அலுவலர்கள் தற்போது சேவை நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளனர். அத்துடன் தற்போதுள்ள அலுவலர்கள் இந்த மென்பொருளைப் பயன்படுத்துவதற்காக Science Land நிறுவனத்திடமிருந்து மீண்டும் வினவியுள்ளனர். எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற முறைமை மற்றும் மென்பொருளைப் பயன்படுத்துவது தொடர்பான சிக்கல்கள் எழுந்துள்ளதன் காரணமாக அது பற்றி 2009 ஆம் ஆண்டு மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்ட Science Land நிறுவனத்துடன் கலந்துரையாடி இந்த மென்பொருளைப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்வேன்.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) புனர்வாழ்வு அதிகார சபையின் அலுவலகத்திற்குப் போதியளவு இடவசதிகள் இல்லாமை காரணமாக 2009 ஆம் ஆண்டு முதல் வசதிகளைக் கொண்ட கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்ளத்

தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2007.08.14 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு வினாவின் மூலமும் போதியளவு இடவசதிகள் இல்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு 08, ஆனந்த ராஜகருணா மாவத்தை, இலக்கம் 95 எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் இடவசதிகளை விஸ்தரிப்பதற்கு உரிமையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் குறித்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. எவ்வாறாயினும், மேற்படி கட்டிடம் 6500 சதுரஅடி அளவானதாகும்.

நிறுவனத்தின் பதவியணியினர் மற்றும் வேலை நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதை அடுத்து கட்டிடத்தில் இடவசதிகள் போதுமானதாக இல்லை என்பதுடன், அதற்கு மேலதிகமாக குறித்த கட்டிடத்திற்கான மாதாந்த வாடகையும் அதிகரிக்கப்பட்டதுடன், கட்டிடத்தின் உரிமையாளர் குறித்த தொகையைச் செலுத்த முடியாத பட்சத்தில் வேறு இடமொன்றைத் தேடிப் பெற்றுக் கொள்ளுமாறு சட்டத்தரணி ஊடாக அறியத்தந்துள்ளார்.

அதற்கமைய, 2013.10.14 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் சுமார் 11,000 சதுர அடி அளவான கட்டிடமொன்றில் காணப்பட்ட அமைச்சு மற்றும் அதற்கு அண்மித்த சூழலில் காணப்பட்ட கட்டிடமொன்று தேடிப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

பதவியணியினர் சுமார் 70 பேராக உள்ள போதிலும், நிறுவனத்தில் காணப்படுகின்ற நட்டஈடு, கடன் திட்டங்கள் சம்பந்தமான ஆவணக் கோப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதுடன், அதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஆவணக் கோப்புக் கபட்கள் 100 இற்கும் மேற்பட்டதாக காணப்படுகின்றன. பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பதவியணியினரின் சுகாதார வசதிகள் உள்ளடங்கலாக குறித்த கட்டிடத்தின் அளவைக் கவனத்தில் கொண்டு, இலக்கம் 59, டி.எஸ். சேனாநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடம், வழங்கல் நடைமுறை மற்றும் அமைச்சின் செயலாளரது அறிவுரைக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டது. 2014.01.01 ஆம் திகதி முதல் புனர்வாழ்வு அதிகார சபை இந்த இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட செயல்ரீதியான திட்டத்தில் உள்ளடக்கப்படாத போதிலும், தேசத்திற்கு மகுடம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பை வழங்க வேண்டியிருந்தது. அதற்கான ஏற்பாடுகள் காணப்படவில்லை என்பதுடன், இது தொடர்பாக உரிய அமைச்சின் அமைச்சரை அறிவுறுத்தி திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டுக்கு குறித்த செலவு விடயங்களை உள்ளடக்கி அமைச்சின் செயலாளர் ஊடாக திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 5. கணக்கு நடவடிக்கைகளின்தன்மை மற்றும் நல்லாட்சி

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் கண்காணிப்பின் கீழ் அதிகார சபையின் சகல கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளும் உள்ளடக்கப்படும் வகையில் 2014 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வு

மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைத் தாபிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக புனர்வாழ்வு உதவியாளர் ஒருவர் இப்பணிக்கு அமர்த்தப்பட்டு அது தொடர்பான கணக்காய்வு வேலைத்திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. முறைமையும், கட்டுப்பாடும்.

(அ). இலங்கை அரசாங்க கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) நிலையான சொத்துக்களுக்கென நிலையான சொத்துப் பதிவேட்டை முறையாகப் பேணிவருவதும், இற்றைப்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) ஆண்டின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு ஏற்புடையவாறு சகல பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் அமுல்படுத்தப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் ஊடாக செலவினங்களைக் கட்டுப்படுத்தி வரவு செலவுத்திட்டத்தைக் கட்டுப்பாட்டுடன் பேணிவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஈ) முறையாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

(உ) ஆண்டின் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்கு அமைவாக நட்டஈடு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஒப்பம் / என். பத்மநாதன்

தவிசாளர்,

புனர்வாழ்வு அதிகார சபை.

பிரதிகள் :

1. கணக்காய்வு அத்தியட்சகர், அரசாங்க கணக்காய்வுப் பிரிவு, சிறைச்சாலைகள் தலைமையகம், கொழும்பு – 03.
2. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு,